# வாய் புற்றுநோயைத் தடுப்போம்



# வாய் புற்றுநோய்க்கு நீங்கள் ஏன் கவனம் செலுத்த வேண்டும்?

- **வாய் புற்றுநோய்:**
  - ஆண்கள் மத்தியில் முதலிடத்தில் காணப்படுகின்றது
  - பெண்கள் மத்தியில் அதிகம் காணப்படுகின்ற 10 விதமான புற்றுநோய்களில் வாய் புற்றுநோயும் அடங்கும்

- **வாய் புற்றுநோய் தொடர்பான தரவின் சராசரி தினசரி கண்டறிதல்**
  - நாளொன்றுக்கு புதிதாக வாய் புற்றுநோயாளர்கள் ஏறத்தாழ 06 - 07 பேர் கண்டறியப்படுகின்றனர்
  - ஏறத்தாழ 03 நோயாளர்கள் மரணிக்கின்றனர்

# வாய் புற்றுநோய்க்கு நீங்கள் ஏன் கவனம் செலுத்த வேண்டும்?

- வாய் புற்றுநோய் ஏற்படுவதற்கு முன்னர் வாயில் முன் அறிகுறிகளை அடையாளம் காணலாம்

- இவற்றை ஆரம்பத்தில் இனங்கண்டு சிகிச்சை மேற்கொண்டால் வாய் புற்றுநோய் ஏற்படுவதை தடுக்க முடியும்

- சுய வாய்ப் பரிசோதனை மூலமாக வாயில் ஏற்படும் பொதுவான அசாதாரணங்களை நீங்களே இனங்கான முடியும்

**ஆரம்பத்தில் கண்டறிந்து சிக்கல்களைத் தவிர்ப்போம்**

# வாய் புற்றுநோய்களை ஏற்படுத்தும் ஆபத்து காரணிகள்

## முக்கிய காரணிகள்

- வெற்றிலை மெல்லுதல்
- புகையிலை மற்றும் பாக்கு அடங்கிய தயாரிப்புகளைப் பயன்படுத்தல் (பாக்கு பக்கட்)
- புகைத்தல்
- அதிகப்படியான மது அருந்துதல

## பிற காரணிகள்

- நோய்த்தொற்றுகள் (வைரஸ்கள் மற்றும் பூஞ்சைகள்)
- ஊட்டச்சத்து குறைபாடு
- அழுக்கு வாய்

இந்த பழக்கங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை உங்களிடம் இருந்தால் உங்களுக்கும் ஆபத்து உள்ளது.

# வாய் புற்றுநோய் ஏற்படுவதற்கான படிமுறைகள் (பெரும்பாலான சந்தர்ப்பங்களில்)



# வாய் புற்றுநோய் ஏற்படுவதற்கு சாத்தியமான முந்தைய நோய் நிலை அறிகுறிகள்

- வலியற்ற வெள்ளை அல்லது சிவப்பு அல்லது வெள்ளை, சிவப்பு கலந்த புண்கள்
- காரமான உணவுகளை எடுத்துக் கொள்ளும்போது வாயில் எரிவு
- உதடுகளில் இளஞ்சிவப்பு நிறத்திற்கு பதிலாக அசாதாரண வெண்மை தோற்றம்
- பிற காரணிகளால் விளக்க முடியாத வாய் திறப்பதில் கடினம்

பெரும்பாலான சந்தர்ப்பங்களில், இந்த அறிகுறிகள் அன்றாட வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தாது

# வாய்ப் புற்றுநோய் ஏற்படுவதற்கு சாத்தியமான முந்தைய நோய் நிலைகள்



வெள்ளை நிற திட்டுக்கள்



சிவப்பு நிற திட்டுக்கள்



சிவப்பு - வெள்ளை நிற திட்டுக்கள்



குணப்படாத புண்கள்



வெளிர் தோற்றம்

# மேலணிக்கு கீழான இழையச்சுருக்கம் (OSMF)

- பாக்கு தொடர்பான தயாரிப்புகளால் ஏற்படுகிறது
- ஆரம்ப கட்டங்களில்: காரமான உணவுகளை சாப்பிட இயலாமை
- வாய் இழையங்களின் வெளிர் தோற்றம்
- வாய் இழையங்கள் கடினமாதல்





# மேலணிக்கு கீழான இழையச்சுருக்கம் (OSMF)

- இறுதி கட்டங்களில்:
    - வாய் திறப்பு குறைவடைதல்
    - பேச்சு தடைகள் ஏற்படுதல்
    - விழுங்குவதில் கடினம்



- **சமீபத்திய தரவுகளின்படி, இது** வாய் புற்றுநோய் ஏற்படுவதற்கு சாத்தியமான முந்தைய நோய் நிலைகளில் அதிகமாக ஏற்படும் நோய்நிலையாகும்
- இதனால் வாய் புற்றுநோய் உருவாகும் அபாயம் அதிகமாக உள்ளது

# வாய் புற்றுநோயின் அறிகுறிகள்

- வாய் புற்றுநோய்க்கு **சாத்தியமான** முந்திய நோய் நிலை **காயத்தின் திடீர் வளர்ச்சி**

- **வாயினுள் குணமடையாத காயம் / புண்**


- **குறுகிய காலத்தில் விழுங்குவது, அல்லது** நாக்கை **நகர்த்துவதில் சிரமம்**

- **குறுகிய காலத்தில் வாயில் அசாதாரண வளர்ச்சி**

- **தொண்டையில் தொடர்ந்து தடைசெய்யும் உணர்வு**

- **அசாதாரண**மாக பற்கள் ஆடுதல்





# வாய் புற்றுநோயின் அறிகுறிகள்

- குறுகிய காலத்தில் வேறு எந்த காரணத்திற்காகவும் ஏற்படாத தொண்டையின் வீக்கம்
- பல் அகற்றப்படும்போது ஏற்படும் காயம் குணமடையவில்லை
- வாய் மற்றும் நாக்கில் வலி அல்லது உணர்வின்மை
- குறுகிய காலத்தில் குரலில் ஏற்படும் மாற்றங்கள்
- கழுத்தில் நிணநீர் முனையங்களின் நாள்பட்ட வீக்கம்






# சுய வாய்ப் பரிசோதனை

**பரீட்சிக்க வேண்டிய இடங்கள்:**

- மேல் மற்றும் கீழ் உதடுகள்
- கன்னத்தின் உட்புறம் - இடது மற்றும் வலது
- மேல் அண்ணம் மற்றும் தொண்டை
- நாக்கு எல்லா பக்கமும் – மேற்பகுதி, கீழ்ப்பகுதி, இரு பக்கங்கள்
- முரசுகள் – எல்லா பக்கங்களும்
- வாயின் அடி




A brief screen for *Oral Cancer* includes this 8 step examination of the inside of the mouth

# சுய வாய்ப் பரிசோதனை

பரீட்சித்துப் பார்ப்போம்


பகுதிகள் 5 படிகள் 8


- கைகளை நன்றாகக் கழுவிக் கொள்ளவும்
- செயற்கை பற்கள் அல்லது வேறு உபகரணங்கள் வாய்க்குள் இருக்குமாயின் அவற்றை கழற்றிக் கொள்ளவும்
- வாயை நன்கு கழுவி சுத்தம் செய்துகொள்ளவும்
- முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்றின் முன்னால் செல்லவும்
- வாய்க்கு நன்கு வெளிச்சம் விழ விடவும்
- வாயைத் திறந்து எல்லா இடங்களையும் நன்கு பரீட்சித்துப் பார்க்கவும்



# 1 சுய வாய்ப் பரிசோதனை - உதடுகள் மற்றும் அருகிலுள்ள முரசுகள்

கை விரல்களினால் மேல் மற்றும் கீழ் உதடுகளை புரட்டி உட்பகுதிகளை நன்கு பரீட்சித்துப் பார்க்கவும்



# உதடுகள் மற்றும் முரசுகளுடன் தொடர்புடைய இந்த அசாதாரணங்கள் ஏதேனும் உண்டா என்று பாருங்கள்

உதடுகளில் ஏற்படும் புண்



உதடுகள் மற்றும் அருகிலுள்ள முரசுகளின் நிறத்தில் ஏற்படும் மாற்றம் - வெள்ளை நிறமாக தோற்றமளித்தல்



# 2. சுய வாய்ப் பரிசோதனை - கன்னத்தின் உட்பகுதி- இரு பக்கங்களும் மற்றும் அருகிலுள்ள முரசுகள்

வாயை அகலமாக திறந்து கன்னத்தின் உட்புறம், வாயின் பக்க சுவர்கள் மற்றும் அருகிலுள்ள முரசுகளையும் பரீட்சித்துப் பார்க்கவும்.






# கன்னத்தின் உட்பகுதியில் ஏற்படும் பொதுவான அசாதாரணங்கள

**கன்னத்தின் உட்பகுதியில் ஏற்படும் வெள்ளை நிற திட்டுக்கள்**



**கன்னத்தின் உட்பகுதியில் ஏற்படும் சிவப்பு மற்றும் வெள்ளை நிறம் கலந்த திட்டுக்கள**




# 3.சுய வாய்ப் பரிசோதனை: நாக்கு எல்லா பக்கமும

நாக்கை வெளியே இழுத்து, முன் நுனியில் இருந்து உள்நோக்கி அனைத்து பக்களையும் (மேற்பகுதி, கீழ்ப்பகுதி, இரு பக்கங்கள்) பரீட்சித்துப் பார்க்கவும்




படி 5



படி 6

# 4. சுய வாய்ப் பரிசோதனை: வாயின் அடி மற்றும் அருகிலுள்ள முரசுகள்

நாக்கை உள் பக்கம் வளைத்து நாக்கின் கீழ் வாயின் அடி மற்றும் அருகிலுள்ள முரசுகளையும் பரீட்சித்துப் பார்க்கவும்



# நாக்கு மற்றும் வாயின் அடியில் ஏற்படும் பொதுவான அசாதாரணங்கள

வாயின் அடியில் ஏற்படும் கட்டிகள்



நாக்கின் ஏற்படும் வெள்ளை நிற திட்டுக்கள



# 5. சுய வாய்ப் பரிசோதனை: மேல் அண்ணம், அருகிலுள்ள முரசுகள் மற்றும் தொண்டை

நன்கு வாயைத் திறந்து மேல் அண்ணம் அருகிலுள்ள முரசுகள் மற்றும் தொண்டை என்பவற்றைப் பரீட்சித்துப் பார்க்கவும்


படி 8

# அண்ணத்தில் மற்றும் அருகிலுள்ள முரசுகளில் ஏற்படும் பொதுவான அசாதாரணங்கள்

அண்ணத்தில் மற்றும் அருகிலுள்ள முரசுகளில் ஏற்படும் வெள்ளை நிற திட்டுக்கள



அண்ணத்தில் ஏற்படும் சிவப்பு நிற திட்டுக்கள



# நாங்கள் அறிவோம் - மற்றவர்களை அறிய வைப்போம்

- புகையிலை மற்றும் பாக்கு தயாரிப்புகளின் தீங்கு விளைவுகள் பற்றி அறிவுறை வழங்குதல்
- ஆபத்து குழுக்களுக்கு அறிவுறை வழங்குதல்
- இளைய தலைமுறையினருக்கு அறிவுறை வழங்குதல்
- மறைமுக விளம்பர முறைகளுக்கு இரையாகாதீர்கள்
- தவறான சான்றுகளுக்கு இரையாக வேண்டாம்

# சிறந்த வாய்ச் சுகாதார பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்போம் - வாய் புற்றுநோயை தடுப்போம்

- வெற்றிலை வழங்குவதைத் தவிர்க்கவும்
- புகையிலை / பாக்கு பொருட்கள் (பாக்கு பாக்கெட்டுகள்) மெல்லுவதைத் தவிர்க்கவும்
- புகைப்பதைத் தவிர்க்கவும்
- குடிப்பதைத் தவிர்க்கவும்






# சிறந்த வாய்ச் சுகாதார பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்போம் - வாய் புற்றுநோயை தடுப்போம்

- மாதம் ஒரு முறை சுய வாய் பரிசோதனை செய்வதை வழக்கமாககிக் கொள்ளுங்கள்
- வாயில் ஏதேனும் வித்தியாசங்களைக் கண்டால் உடனே பல்மருத்துவரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுங்கள்
- **வருடத்திற்கு ஒரு முறையாவது மருத்துவ வாய்வழி பரிசோதனை செய்யுங்கள்**
- வாயில் **மாற்றங்கள் ஏற்பட்டால், சிகிச்சை மற்றும் பின்தொடர்தல் கிளினிக்குகளை கண்டிப்பாக கடைபிடிக்கவும்**
- சிறந்த வாய் சுகாதார நிலையினை பேணுங்கள்



# உங்களுக்குத் தெரியுமா?

- புகைபிடிக்காத புகையிலை பொருட்களின் உற்பத்தி, இறக்குமதி, மற்றும் விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது
- அனைத்து சுகாதார நிறுவனங்களும் வெற்றிலை, புகையிலை மற்றும் பாக்கு தொடர்பான பொருட்களை மெல்லுதல் மற்றும் விற்பனை தடை விதிக்கப்பட்டுள்ளது
- அனைத்து அரசு நிறுவனங்களிலும் வெற்றிலை, புகையிலை மற்றும் பாக்கு பொருட்களை மெல்லுதல் மற்றும் விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது
- ரயில்களில் வெற்றிலை மெல்லுதல் மற்றும் துப்புவது தடைசெய்யப்பட்டுள்ளது
- பொது சாலைகளில் துப்புவது தடைசெய்யப்பட்டுள்ளது

# உங்களுக்குத் தெரியுமா?

- ஒரு நாளைக்கு 5 சிகரெட்டுகள் மற்றும் வெற்றிலைகளை உட்கொள்ளும் ஒருவர் தனது பழக்கத்தை நிறுத்தினால் ரூ .500 வரை சேமிக்க முடியும்
- இது ஒரு வருடத்தில் ரூ. 180,000 வரை சேமிக்க முடியும்




# வாய் பரிசோதனைகள் செய்யப்படும் இடங்கள் மற்றும் சிகிச்சைகள்


- பல் கிளினிக்குகள்
- ஆரோக்கிய மையங்கள்
- இந்த கிளினிக்குகளில் சிகிச்சை:
  - **வாய் புற்றுநோய் மற்றும் வாய்ப் புற்றுநோய்** ஏற்படுவதற்கு சாத்தியமான முந்தைய நோய் நிலை அறிகுறிகளை **கண்டறிதல்**
  - ஆபத்து பழக்கங்களைப் பற்றிய விழிப்புணர்வு, பழக்கத்தை எவ்வாறு குறைப்பது என்பது குறித்த ஆலோசனை
  - மேலதிக சிகிச்சைக்காக கிளினிக்குகளுக்கு பரிந்துரைக்கப்படுகிறது
- இந்த கிளினிக்குகளுக்கு மேலதிகமாக, மாவட்ட அளவிலான உள்ளூர் பல் மருத்துவர் மற்றும் தொற்றா நோய் மருத்துவரிடமிருந்து ஆலோசனைகளைப் பெறலாம்

# வாய் புற்றுநோய் சிகிச்சை மற்றும் சிகிச்சை மையங்கள்

- வாய் புற்றுநோய்க்கான முக்கிய சிகிச்சைகள்:
  - அறுவை சிகிச்சை
  - ஆன்டிகான்சர் மருந்து சிகிச்சை
  - கதிர்வீச்சு சிகிச்சை
- இலங்கையில் வாய் புற்றுநோய் சிகிச்சை மையங்கள்:
  - 32 வாய் மற்றும் முகத்தாடை அறுவை சிகிச்சை நிலையஙகள்
  - 22 புற்றுநோய் சிகிச்சை மையங்கள்




Oro Maxillo Facial Surgical units in Sri Lanka




Cancer treatment centers in Sri Lanka

# சிறந்த வாய்ச் சுகாதார பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்போம் - வாய் புற்றுநோயை தடுப்போம்